8th August 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. சங்கரன் : நான் இக்கேள்வியை எழுப்பியபோது சுமார் மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்பு அப்போதுள்ள நிலை பற்றி கேட்டேன் . . . இப்போதுள்ள நிலை என்ன?

கனம் சபாநாயகர் : உங்கள் பேரில் யாரும் குறை சொல்லவில்லை.

* 229 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for the Public Health be pleased to state—

(*a*) whether the Government are aware that Tiruchengode and Sankari taluks are in the grip of a serious water famine and that drinking water is being sold there from 12 paise to 15 paise per pot; and

(*b*) if so, the measures proposed to relieve the said distress?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) சங்கரி, திருச்செங்கோடு தாலூகாக்களில் குடி நீர் தட்டுப்பாடு உள்ளது, கிராமங்களில் உள்ளவர்களுக்குக் குடி நீர் வசதி ஏற்படுத்துவதற்காக அங்குள்ள கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன.

திருச்செங்கோடு நகராட்சியிலும், சங்கரி நகரப் பஞ்சாயத்திலும் அவசியமான இடங்களில் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. தேவையானவர்களுக்கு லாரிகள் மூலமாகக் குடி நீர் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

புலவர் கா. கோவிந்தன் : திருச்செங்கோட்டில் பாராளுமன்ற இடைத்தேர்தல் நடந்தபோது அப்போது முதல் அமைச்சராக இருந்த திரு. காமராஜ் அவர்கள் குடிதண்ணீர் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். அந்தத் திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது? தேர்தல் நேரத்தில் பொது மக்களை ஏமாற்றுவதற்காக நடத்தப்பட்ட அடிக்கல் நாட்டு விழாதானு என்பதுபற்றி விளக்குவார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏமாற்றுவதற்காக செய்யவில்லை. அங்குள்ளவர்களுக்கு குடிதண்ணீர் தாராளமாக வழங்கவேண்டுமென்றுதான் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால், அதன் எக்ஸ்பென்டிசர் அதிகப்படியான காரணத்தினால், சமீபத்தில் ஏற்பட்ட பல ஆக்கிரமிப்புகள் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சோ. ஆறுமுகம் : ஒவ்வொரு வருடமும் திருச்செங்கோடு சங்கரி பகுதியில் இந்த குடிதண்ணீர் பஞ்சம் இருந்து கொண்டேயிருக்கிறது. ஆகவே, காவேரி ஆற்றிலிருந்து திருச்செங்கோட்டுக்கு தண்ணீர் கொண்டு வருவதற்கான திட்டம் ஒன்று இருந்தது. அது என்னவாயிற்று? அங்கு ஒவ்வொரு கிராமத்திலும் இந்த குடிதண்ணீர் பஞ்சம் இருப்பதால் கிணறுகளை ஆழப்படுத்த ஏற்பாடு செய்வதாகச் சொல்லப்பட்டது. அதுபோல் இல்லை. சர்க்காரிடம்

மாவட்ட கலெக்டர் ரூபாய் கேட்டு எழுதியிருக்கிறார்கள். அவற்றை சீக்கிரத்தில் அடி ஆழப்படுத்த பணம் கொடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : திருச்செங்கோட்டில் தண்ணீர் சப்ளை செய்கிற திட்டத்தை நம் முன்னால் முதல் அமைச்சர் அவர்கள் திருச்சிக்கு ப்ளேனில் வந்து திருச்சியிலிருந்து திருச் செங்கோட்டிற்கு வந்து அடிக்கல் நாட்டி விட்டுச் சென்றார்கள். தேர்தல் நடக்கிற சமயமாதலால் ப்ளேனில் வருகிறார்கள். வேக மாக வருகிறார்கள், வந்து அடிக்கல் நாட்டிவிட்டுச் சென்றிருக் கிறார்கள். அந்தத் தேர்தலில் தோற்ற பிறகு எதற்காக இந்தத் திட்டத்தை மாற்றவேண்டும்? அதற்குப் பிறகு வேறு திட்டங்களே மேற்கொள்ளப்படவில்லையா? முதல் அமைச்சர் அவர்கள் வந்து அடிக்கல் நாட்டிவிட்டு, 18 லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்து திட்டத்தை ஏற்ற பிறகு எதற்காக அதை ஒத்திவைக்கவேண்டு மென்பதை விளக்குவார்களா? ஒரு வேளை திருச்செங்கோடு தேர்தலில் தோற்றதுதான் காரணமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : திருச்செங்கோட்டில் ஏற்கனவே நான்கு கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டு, புதுக் கிணறு களும் வெட்டப்பட்டு தண்ணீரும் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேர்தலுக்கும் மக்களுக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை.

*** 230 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா புளியங்குடி முனிசிபாலிட்டிக்கு சுகாதாரமான பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் சப்ளை செய்யும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் உத்தேச எஸ்டிமேட் தொகை என்ன?

(உ) எப்பொழுது, அவ்வேலை ஆரம்பிக்கப்படும்?

THE HON. SRIMATHI **JOTHI VENCATACHELLUM** : (*a*) to (*c*) : In March 1963 the Government have sanctioned the revised estimate amounting to Rs. 31.39 lakhs for a Composite Water Supply Scheme for Sankarankoil, Puliangudi, etc., Panchayats. The scheme is under execution.

திரு. எம். எஸ். செல்வராஜன் : குடிதண்ணீர் வழங்குவதற்கு எந்தயிடத்தில் இருந்து தண்ணீர் எடுப்பதாக உத்தேசம் என்ற விவரத்தை அறிவிக்க முடியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சங்கரன்கோவில், புளியங்குடி முனிசிபாலிட்டீஸ் தவிர முள்ளிக்குளம், தலைவன் கோட்டை, நகரம், மலயடிகுறிச்சி, வீரிருப்பு, கரிங்கபுரம் பஞ்சா யத்துக்களும் இந்த காம்போஸிட் வாட்டர் சப்ளை ஸ்கீமில் சேர்க் கப்பட்டிருக்கின்றன.